**கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்தரவு**

**பிறப்பிப்பவர்: திரு.இரா.சேகர்,BE.,**

ந.க.எண்: /எச்1 நாள்: 20.06.2026

**பொருள்:** கிருஷ்ணகிரி நகராட்சி –பொது சுகாதாரப்பிரிவு– ABC பணிகள்–பொது மக்கள் பாதுகாப்பு கருதி – நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுற்றி திரியும் நாய்களுக்கு உணவு அளிக்க – தனி இடங்கள் ஒதுக்கி உத்தரவிடுதல்– தொடர்பாக

**பார்வை** மாண்பமை உச்சநீதிமன்ற நீதிபேராணை SUO MOTO WRIT PETITION (CIVIL)NO(5) OF 2025 Dated:22.08.2025.

**உத்தரவு:**

பார்வையில் கண்டுள்ள , மாண்பமை உச்சநீதிமன்ற 22.08.2025 ஆம் தேதியநீதிபேரணையில் ( SUO MOTO WRIT PETITION (CIVIL) NO(S).5 OF 2025) விலங்கு கட்டுபாடு விதிகள் 2023–இன் படி , தெரு நாய்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக. பொது மக்களுக்கு இடையூறாக சுற்றி திரி யும் தெரு நாய்களை பிடித்து ரேபீஸ் தடுப்பூசி செலுத்தி , பிடிக்கப்பட்ட இடத்திலேயே கொண்டு விடும் பணிகளை நகராட்சியால் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும் பொது மக்கள் தெரு நாய்களுக்கு உணவு அளிக்க ஏதுவாக உணவு அளிக்கும் இடங்களை நகராட்சியால் ஒதுக்கீடு செய்யப்பட்டு அவ்விடத்தில் மட்டும் தான் பொது மக்கள் , தெரு நாய்களுக்கு உணவு அளிக்க வேண்டும் எனவும் மேலும் தெருநாய்களுக்கு உணவு அளிக்கும் இடம் என்பதற்கான உரிய விளம்பர பலகைகளும் வைக்கப்பட்டு போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. நீதிபேரணையின்படி கிருஷ்ணகிரி நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட இடங்களில் தெருநாய்களுக்கு உணவு அளிக்கும் இடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | உணவளிக்க தேர்தேடுக்கப்பட்டுள்ள இடம் |
|---|---|---|
| 1 | வார்டு 4 | மக்கான் தெரு. |
| 2 | வார்டு 10 | காந்தி ரோடு (பழைய பேருந்து நிலையம்) |
| 3 | வார்டு 27 | கிச்சப்பன் தெரு |
| 4 | வார்டு 7 | லண்டன்பேட்டை II. |

மேற்கண்ட இடங்களில் மட்டுமே பொது மக்கள் தெரு நாய்களுக்கு உணவு அளிக்க இயலும் என்ற விழிப்புணர்வினை ஏற்படுத்திட தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இப்பணி உச்சநீதிமன்ற உத்தரவின்படி நடவடிக்கை எடுக்கப்படுவதால் எவ்வித சுணக்கமும் இன்றிபணிபுரிந்திட இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. தவறும் பட்சத்தில் தக்க நடவைக்கை எடுக்கப்படும்என தெரிவிக்கப்படுகிறது.

ஆணையாளர்

கிருஷ்ணகிரி நகராட்சி

20/6/26

பெறுநர்

1. அனைத்து துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள்–கிருஷ்ணகிரி நகராட்சி
2. நகல்–துப்புரவு ஆய்வர்–கிருஷ்ணகிரி நகராட்சி (உரிய நடவடிக்கைக்காக)
3. நகல் ஆணையர் மேசைக்கு,

நகல் பணிந்தனுப்பப்படுகிறது.

- நகராட்சி நிர்வாக இயக்குநர்–சென்னை–28.
- நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்–சேலம் மண்டலம்.